5.9.2024

எம்சிஓபி.எண். 48/2023 உ/இ.49/2023

ம.சா.2  நவீன்ராஜ் த/பெ. வெங்கடாசலம்

1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்து தொடர்பாக காவல் நிலையத்தில் நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை. விபத்து அன்று நான் வேலைக்கு சென்றிருந்தேன். எனது அலுவலகம் இராசிபுரம் புதிய பேருந்து நிலையம் அருகே உள்ளது. நான் மேக்னம் என்ஸிஓ வில் வேலை பார்க்கிறேன். விபத்தில் அடிபட்டவர்களை முன்பே எனக்கு தெரியும் என்றால் இன்று தான் எனக்கு தெரியும். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. கோவிந்தராஜ் என்பவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க சாட்சியம் அளிக்கிறேன். நான் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்து கொண்டிருந்தேன். இருசக்கர வாகனத்தில் சென்றவர்களும் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி சென்று கொண்டிருந்தார்கள். கார் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வந்து கொண்டிருந்தது. விபத்து வளைவில் நடைபெற்றதா என்றால் நேர்சாலையில் நடந்தது. சத்தம் கேட்டு நான் சென்று பார்த்தேன் என்றால் என் முன்பு தான் விபத்து நடந்தது. நான் சென்று கொண்டிருந்த இடத்திற்கும் விபத்து நடந்த இடத்திற்கும் இடைவெளி 30மீட்டர் இருக்கும். 10 மீட்டர் இடைவெளில் நான் கார் வேகமாக வருவதை பார்த்தேன். விபத்தை நான் பார்க்கவில்லை என்றும் காயம்பட்டவர் கேட்டுக்கொண்டதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் விபத்தை பார்த்திருந்தால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. விபத்து தொடர்பாக வேறு நீதிமன்றத்தில் நான் எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. விபத்து கார் ஓட்டுனரின் கவனக்குறைவால் நடைபெறவில்லை என்றும் இருசக்கர வாகனம் ஓட்டியவர் தான் விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

ஒம்/- வெ.நவீன்குமார்

Taken down before/by me in/ open court and read over/ interpreted/
to the witness and acknowledge/ by him/ her to be correct.P

Sd/- xxxxxxxxxx.
Sub Judge, Rasipuram.